## சட்டக்கலை அறிமுகம்–05

## معنى كلمة الفقه وتطوره

Moulavi M.M.Zaky B.A. (Hons)

### சட்டக்கலை கடந்து வந்த பாதை - இரண்டாம் கட்டம்:

### ஸஹாபாக்களுடைய காலம்

நபி (ஸல்) அவர்களுடைய காலப்பகுதியில் இடம் பெறாத, நவீன பிரச்சினைகள் ஸஹாபாக்களுடைய காலத்தில் இடம்பெற்றன. இதற்கு 3 காரணங்கள் உள்ளன. அவை வருமாறு:

1) முஸ்லிம்கள் பல நாடுகளை வெற்றி கொண்டமை.
2) இஸ்லாத்தின் வளர்ச்சியின் காரணமாக புதிய சமூகங்களுடன் இஸ்லாத்துக்கு உறவுகள் ஏற்பட்டமை.
3) இஸ்லாத்தில் தம்மை இணைத்துக் கொண்ட புதிய சமூகங்களிடம் இருந்த - அரபிகளிடம் காணப்படாத - வழக்காறுகள்

ஆகவே, இவ்வாறு இஸ்லாத்தின் பரவலோடு ஏற்பட்ட புதுப்புதுப் பிரச்சினைகளுக்குரிய தீர்ப்புக்களைக் கண்டறிய வேண்டிய கடமை முஸ்லிம் ஆட்சியாளர்கள் மீது ஏற்பட்டது. ஏனெனில், இஸ்லாம் தீர்ப்புக் கூறாது எந்த விடயத்தையும் விட்டுவைக்கவில்லை.

இக்காலப்பகுதியில் சட்டதுறையில் நுணுக்கம் மிக்க ஸஹாபாக்கள் காணப்பட்டனர். கிட்டத்தட்ட 130 ஸஹாபாக்கள் பத்வாக்கள் வழங்குவதில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். இவர்களில் ஸஹாபியப் பெண்மணிகளும் இடம் பெற்றிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

ஆகவே, புதிய பிரச்சினைகள் இடம்பெற்ற போதெல்லாம் ஆட்சியாளர்களும், குடிமக்களும் இவர்களையே நாடினர். இவர்களில் குறிப்பிட்ட சிலர் மிக அதிக அளவிலான பத்வாக்களை வழங்கியுள்ளனர். அதிக அளவிலும் குறைந்த எண்ணிக்கையிலும் தீர்ப்புக்களை வழங்கியோர் என்று நோக்கும் போது மேற்படி 130 ஸஹாபாக்களையும் 3 பிரிவினராகப் பிரித்து நோக்கலாம். அவை:

A. அதிக அளவில் பத்வாக்களை வழங்கியோர்:

www.mahaiddawa.org

இவர்கள் மார்க்கத் தீர்ப்புக்களை வழங்குவதில் அதிகமாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். இவர்களுடைய எண்ணிக்கை 7 ஆகும். இவர்களின் பெயர்கள் வருமாறு:

1. கலீபா உமர் (ரழி) அவர்கள்.
2. கலீபா அலீ (ரழி) அவர்கள்.
3. ஹஸ்ரத் ஸைத் பின் ஸாபித் (ரழி) அவர்கள்.
4. அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள்.
5. ஹஸ்ரத் அப்துல்லா பின் உமர் (ரழி) அவர்கள்.
6. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரழி) அவர்கள்.
7. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரழி) அவர்கள்.

இவர்கள் ஒவ்வொருவரும் வழங்கியுள்ள தீர்ப்புக்களைத் தனித்தனியாக ஒன்று திரட்டினால் அவை ஒவ்வொன்றும் பெரிய பெரிய தொகுப்புக்களாக அமையலாம்.

B. ஓரளவு தீர்ப்புக்களை வழங்கியுள்ளோர்:

முதலாவது சாராரை விடக் குறைவாகவும் அடுத்து வருகின்ற 3வது பிரிவினரைவிட அதிமாகவும் தீர்ப்புக்க்களை வழங்கியுள்ளவர்களில் முதலாம் கலீபா அபூபக்கர் (ரழி) அவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர் அதிக அளவில் பத்வாக்கள் வழங்குவதில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளாததற்குக் காரணங்கள் பல. அவை வருமாறு:

1) நபி (ஸல் ) அவர்களுடைய வபாத்துக்குப் பிறகு இவர் நீண்டகாலம் உயிர் வாழாமை. இவர் ஹிஜ்ரி 13ஆம் ஆண்டு வாபாத்தாகிவிட்டர்கள்.
2) ரஸூல் (ஸல்) அவர்களுடைய வபாத்தை அடுத்து மதம்மாறி (முர்தத்களாகி)யவர்கள் மற்றும் ஸகாத் கொடுக்க மறுத்தோர் போன்றவர்களின் பிரச்சினைகளை அவசரமாக முடிவுக்குக் கொண்டு வருவதில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டமை.
3) ரோம் மற்றும் பாரசீகம் போன்ற பிரதேசங்களை வெற்றி கொள்வதற்காகப் படைகளை அனுப்பி வைப்பதில் அதிக கவனம் செலுத்தியமை.

இவ்வாறு ஓரளவு பத்வாக்கள் வழங்குவதில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்களில் கீழ்வரும் ஸஹாபாக்கள் காணப்படுகின்றனர்.

2. கலீபா உஸ்மான் (ரழி) அவர்கள்.
3. ஹஸ்ரத் அபூமூஸா அல் அஷ்அரீ (ரழி) அவர்கள்.
4. அன்னை உம்மு ஸல்மா (ரழி) அவர்கள்.

www.mahaiuddawa.org

5. ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரழி) அவர்கள்.
6. ஹஸ்ரத் அபூ ஸாஃத் அல்கத்தீ (ரழி) அவர்கள்.
7. ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரழி) அவர்கள்.
8. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் பின் அல் ஆஸ்(ரழி) அவர்கள்.
9. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸுபைர் (ரழி) அவர்கள்.
10. ஹஸ்ரத் ஸஃது பின் அபீ வக்காஸ் (ரழி) அவர்கள்.
11. ஹஸ்ரத் ஸல்மான் அல்பாரிஸ் (ரழி) அவர்கள்.
12. ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லா (ரழி) அவர்கள்.
13. ஹஸ்ரத் முஆத் பின் ஜபல் (ரழி) அவர்கள்.

C. முறையே (ஓரிரு) மிகக் குறைந்த எண்ணிக்கையிலான பத்வாக்களை வழங்கிய நபித் தோழர்கள் இவ்வரிசையில் கணிசமான எண்ணிக்கையினர் இடம்பெறுகின்றனர். இவர்கள் அனைவரதும் பெயர்களையும் இங்கு நாம் குறிப்பிடாவிட்டாலும், பெரும்பாலானவர்களுடைய பெயர்களை இங்கு நாம் குறிப்பிடுகின்றோம். அவை:

1) ஹஸ்ரத் அபூ தர்தாஃ (ரழி) அவர்கள்.
2) ஹஸ்ரத் அபூ உபைதா பின் அல் ஜர்ராஹ் (ரழி) அவர்கள்.
3) ஹஸ்ரத் ஸாஃத் பின் ஸைத் (ரழி) அவர்கள்.
4) ஹஸ்ரத் ஹஸன் பின் அலீ (ரழி) அவர்கள்.
5) ஹஸ்ரத் ஹுஸைன் பின் அலி (ரழி) அவர்கள்.
6) ஹஸ்ரத் அந்நுஃமான் பின் பஷீர் (ரழி) அவர்கள்.
7) ஹஸ்ரத் அபூ மஸ்ஊத் (ரழி) அவர்கள்.
8) ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரழி) அவர்கள்.
9) ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரழி) அவர்கள்.
10) ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரழி) அவர்கள்.
11) ஹஸ்ரத் அபூதர் அல் கிபாரீ (ரழி) அவர்கள்.
12) அன்னை ஸபிய்யா (ரழி) அவர்கள்.

இவர்கள் அனைவரும் வழங்கியுள்ள தீர்ப்புக்களை ஒன்று திரட்டி எடுத்தால் ஒரு சிறிய தொகுப்பாக அவை இடம்பெறும்.

அல்லாஹ் மிக அறிந்தவன்.

www.manaruddawa.org